**இராம கோபாலன்**

*நிறுவன அமைப்பாளர்*

**இந்து முன்னணி,** தமிழ்நாடு
59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676

30-6-2010

**சித்தர் பூமியாம் சதுரகிரி மலையில் கிறிஸ்தவர்களின் சதி வேலைக்குக் கண்டனம்!**
**இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் அவர்களின் பத்திரிகை அறிக்கை!**

இந்துக்களின் புனிதத் தலங்களைக் குறிவைத்து கிறிஸ்தவர்கள் தொடர்ந்து தொல்லை கொடுத்து வருகிறார்கள். ஒவ்வொரு முறையும் இந்துக்கள் போராடி வெற்றி கண்டு வந்தாலும் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு!

கலியுகத் தெய்வமான திருவேங்கடமுடையான் எழுந்தருளியிருக்கும் திருப்பதி மலை மீது கிறிஸ்தவர்கள் ஆக்கிரமிக்கும் சதிக்கு ஆந்திராவின் முதல்வராக இருந்த சாமுவேல் ராஜசேகர ரெட்டி துணைபோனார். அதனைக் கண்டித்து பெரும் போராட்டம் வெடித்தது. அதன் பிறகு அரசும், அரசியல்வாதிகளும் பின்வாங்கினர். கிறிஸ்தவர்கள் சதி முறியடிக்கப்பட்டது.

கோவை மாவட்டத்தில் உள்ள தென்கயிலாயம் தலத்திற்குக் கிறிஸ்தவர்களால் ஏற்பட்ட ஆபத்தை அடுத்து தென்கயிலாய பாதுகாப்பு மாநாடும், போராட்டமும் நடைபெற்றது. அதற்குப் பின் அந்தச் சதி தடுத்து நிறுத்தப்பட்டது!

பிருங்கி மகா முனிவர் வாழ்ந்து தவம் செய்த தலம் பிருங்கி மலை, பேச்சு வழக்கில் பரங்கிமலை என்றழைக்கப்பட்டது. அங்கு புனிதமான பிருங்கீஸ்வரர் ஆலயம் பல நூற்றாண்டுகளாக வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது. அந்த மலை ஆங்கிலேய கிறிஸ்தவர்கள் சூழ்ச்சியால் ஆக்கிரமிக்கப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக வரலாற்றைத் திரித்து, ஆட்சியாளர்களைத் தாஜா செய்து, தற்போதைய முதல்வர் கருணாநிதி அவர்கள் அதனைத் தோமையர் மலை என்று அறிவித்தார். தோமையர்(தாமஸ்) என்பவர் அந்த இடத்திற்கு வரக்கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனை எதிர்த்து இந்து முன்னணி தொடர்ந்து போராடி வருகிறது.

அச்சிறுப்பாக்கம் மலையைச் சுற்றி கிறிஸ்தவர்கள் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. இதனை எதிர்த்து அப்பகுதி மக்களோடு இணைந்து அச்சிறுப்பாக்கம் மலையையும், அங்குள்ள ஆலயத்தையும் பாதுகாத்திட இந்து முன்னணி போராடி வருகிறது.

இதுபோல் குறுமுனி அகத்தியர் வாழ்ந்து தமிழ் பரப்பிய பொதிகை மலையிலும் கிறிஸ்தவ சதி வேலை வெளிப்பட்டது. அதனை எதிர்த்தும் போராடியது இந்து முன்னணி!

**தற்போது சித்தர்கள் என்றென்றும் வாழும் சதுரகிரி மலை கிறிஸ்தவர்களின் சதிக்கு இலக்காகி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அங்கு கிறிஸ்தவர்கள் ஏசுவின் சிலையை நிறுவ முயற்சிப்பதாகவும், அங்கு கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் செய்வதாகவும் தகவல்கள் வருகின்றன. இதனை இந்து முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது. சதுரகிரி, சித்தர்கள் வாழ்ந்து வருகிற பூமி. இங்கு கிறிஸ்தவர்கள் இடையூறு செய்தால் சிவ பக்தர்கள் வெகுண்டெழுவார்கள், விளைவுகள் மோசமாகும் என எச்சரிக்கிறோம்.**

இதுபோல் தொடர்ந்து கிறிஸ்தவர்கள் சதி செய்வார்களேயானால் இந்துக்களும் கிறிஸ்தவ சர்ச்களை இந்து கோயிலாக்கப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்று எச்சரிக்கிறோம்! மக்களிடையே வெறுப்பை வளர்க்கும் சதி வேலை செய்யும் பாதிரிகளை நடுநிலையான கிறிஸ்தவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும்.

இந்துக்களின் புனிதமான இடங்கள் பாதுகாக்கப்படவும், வழிபடவும் தக்க ஏற்பாடு செய்வது தமிழக அரசின் கடமை! தமிழக அரசும், காவல்துறையும் உடன் நடவடிக்கை எடுத்து கிறிஸ்தவர்களின் சூழ்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது.

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**

நிறுவன அமைப்பாளர்

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**